**ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் நடவடிக்கைகள்**
**பிறப்பிப்பவர்: திரு. தா.முஹம்மது குதுரத்துல்லா**

ந.க.26783/2016/அ5

நாள்:05.04.2024.

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஈரோடு மாவட்ட வருவாய் அலகு - ஈரோடு வட்டம் - கங்காபுரம் கிராமம் - கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து பணியிடையே 09.08.2007-ல் காலமான பி. சந்திரசேகரன் என்பவரது மகள் லாவண்யா (செல்வி) ச. என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.26783/2016/அ5 நாள்.26.12.2020.
2. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023.
3. அரசுக் கடித எண்.5532/ஜி2/2023, மனிதவள மேலாண்மைத் துறை நாள்:20.09.2023.
4. சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண். ஆ.கு.3/4600/2024 நாள்:28.02.2024.

ശശശശശശ

**ஆணை:**

ஈரோடு மாவட்ட வருவாய் அலகில் பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை வருவாய் ஆய்வாளராக கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு செல்வி.ச.லாவண்யா என்பவர் 28.12.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 2-ல் காணும் அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை (க்யூ-1) துறை நாள்:08.03.2023 மற்றும் அரசுக் கடித எண்.5532/ஜி2/2023 நாள்:20.09.2023-ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை பணிநியமன அலுவலரே பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின் பேரிலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)-ன்படியும் செல்வி.ச.லாவண்யா என்பவரது பணியினை பணியேற்ற நாளான 28.12.2020 முற்பகல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கீழ்கண்ட பட்டியலில் கலம்-04-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Scanned with OKEN Scanner

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செல்வி.ச.லாவண்யா, இளநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு. | 28.12.2020 மு.ப. | 28.12.2020 மு.ப. |

மேலும், தனியருக்கு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை பணிப்பதிவேட்டில் பதிவுசெய்து அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு "ஜி" பிரிவு தலைமை உதவியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-தா.முஹம்மது குதுரத்துல்லா,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
ஈரோடு.

//உண்மைநகல்/உத்தரவுப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்:-
செல்வி.ச.லாவண்யா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

**நகல் :** மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), ஈரோடு.

**நகல் :** தலைமை உதவியாளர்,"ஜி" பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.

**நகல்:** கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல் :** "அ5" - இருப்புக் கோப்பிற்கு.

Scanned with OKEN Scanner